மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
க.பொ.த (உயர்தரம்) 2024
ஆறாம் தவணைப்பரீட்சை

தரம் 13 (2024) **வணிகக்கல்வி- 32-T-1** **இரண்டு மணித்தியாலம்**

அறிவுறுத்தல்கள்
- ❖ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ❖ 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ❖ ஓவ்வொரு வினாவிற்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

வினாத்தாள் 1

வினா இல	புள்ளிகள்
01-30	.....
30-50	.....
மொத்தம்	.....

பகுதி1

01. பின்வரும் பண்புகளில் தேவைகளுக்கு மட்டும் பொருந்தக் கூடிய பண்புகளை கொண்ட விடைத்தொகுதி எது?
1) வரையறுக்கப்பட்டது, பல் வகைப்பட்டது, வணிகரால் தோற்றுவிக்கக் கூடியது.
2) வரையறுக்கப்பட்டது, பொதுவானது, வணிகரால் தோற்றுவிக்க முடியாதது.
3) வணிகரால் தோற்றுவிக்கக் கூடியது. பொதுவானது, பல் வகைப்பட்டது.
4) தனித்துவமானது, வரையறுக்கப்பட்டது, பொதுவானது,
5) வரையறுக்கப்பட்டது, பல் வகைப்பட்டது, தனித்துவமானது. (.....)

02. வணிகம் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணியாக அமைவது?
1. இலாபம் உழைத்தல் 2. நிலைத்திருத்தல் 3. சமூகப்பொறுப்பு
4. தேவைகளும் விருப்பங்களும் 5. பொருட்களும் சேவைகளும் (.....)

03. பின்வரும் அட்டவணையில் X நிரலானது வணிகச்சூழல் தொடர்பான பலம், பலவீனம், வாய்ப்பு அச்சுறுத்தல்களையும் Y நிரலானது அவற்றுக்கான உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகின்றது

X	Y
A – பலம்	1 - புதியசந்தை
B – பலவீனம்	2 - திறன்மிக்க ஊழியவளம்
C – வாய்ப்பு	3 - தளம்பலடையும் கட்டமைப்பு
D – அச்சுறுத்தல்	4 - அதிகரித்த பதிலீடுகள்

X இற்கும் y இற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க
1) A – 2, B – 1,C -4, D – 3
2) A – 2, B -3,C – 4, D – 1
3) A – 2, B – 3, C – 1 , D – 4
4) A – 2, B – 4, C – 1, D – 3
5) A – 1, B- 4, C – 2, D – 3 (.....)

04. பல்வேறு தரப்பினருக்கும் வணிகத்தினால் நிறைவேற்ற வேண்டிய சமூகப்பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.
A – நியாயத்தன்மை
B – சமனாக நடாத்தும் தன்மை
C – வரி செலுத்துதல்
D – தொழில் பாதுகாப்பு
E – சமூகநலனோன்புச்சேவை
F – சுகாதார வசதிகள்

Past Papers Wiki

மேலே கூறப்பட்டவற்றில் ஊழியர்தொடர்பான சமூகப்பொறுப்புக்களை உள்ளடக்கிய விடைத் தொகுதியைத் தெரிவு செய்க

1) ABF 2) BEF 3) BDF 4) ADF 5) DEF

(.....)

05. பின்வரும் அட்டவணையில் x நிரலானது சர்வதேச தரநியமங்களையும் Y நிரலானது அவற்றிக்கான பெயர்களையும் தருகின்றது

X	Y
A – ISO 50001 : 2018	1. உணவுப்பாதுகாப்பு முகாமைத்துவம்
B – ISO 19600 : 2014	2. இடர்முகாமைத்துவம்
C – ISO 22000 : 2005	3. சக்தி செயல்திறன் முகாமைத்துவம்
D – ISO 31000 : 2018	4. உயர் தொழிலும் சௌக்கியமும்
E – ISO 45001 : 2018	5. இணக்கப்பாட்டு முகாமைத்துவம்

X இற்கும் y இற்கும் பொருத்தான இணைப்பைத் தெரிவு செய்க

1) A – 3, B – 5, C – 1 , D – 2 , E- 4 2) A – 3, B – 5, C – 4 , D – 1 , E – 2

3) A – 3, B – 5, C – 1 , D – 4 , E -2 4.) A – 2, B – 5, C – 1, D – 4, E – 3

5) A – 2, B – 5, C -4, D – 3, E – 1 (.....)

06. பொதுக்கம்பனி தொடர்பில் பொருத்தமற்ற கூற்று எது?

1) பங்குகளையும் ஏனைய பிணைப்பத்திரங்களையும் பகிரங்கமாக பொதுமக்களுக்கு வழங்குதல்
2) பங்குகளைச் சுதந்திரமாகக் கைமாற்ற முடியும்.
3) பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியாக பதிவுசெய்ய முடியும்.
4) பங்குதாரர்களுக்கு பங்கு இலாபம் வழங்குகின்ற போது கடன்தீர்கும் நிலை பற்றிய சோதனை அவசியம் இல்லை.
5) கணக்கு வைப்புக்கள் கணக்காய்வு என்பன அவசியம் (.....)

07. கம்பனி ஒன்றைக் கூட்டிணைக்கும் போது கம்பனிப்பதிவாளருக்கு சமர்பிக்க வேண்டிய ஆவணமாகக் கருதமுடியாதது எது?

1) விண்ணப்பப்படிவம் 2) அகவிதிபபத்திரம்
3) சட்டஉறுதி உரை 4) இயக்குனர் சம்மதக்கடிதம்
5) பெயரை உறுதிப்படுத்தும் கூற்று (.....)

08. 'சமூக முயற்சியாண்மை" என்பதை மிகவும் சரியாக விபரிப்பது

1) இடம்பெயர்ந்த மக்களுக்காக கூடாரங்களை அமைத்தல்
2) பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களை வழங்குதல்
3) தனது வணிகத்தில் குடும்ப அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளல்
4) எரிபொருள் நுகர்வைக் குறைக்கக்கூடிய வகையில் ஒரு புதுமையான உபகரணத்தைத் தயாரித்தல்
5) இயலாமையுடைய இளவயதினருக்காக நிறுவனத்திற்குள்ளே 10% வேலைவாய்ப்பை வழங்கல்

(.....)

09. விடுதியில் தங்கியுள்ள ரவி தனது சம்பளத்தில் அரைவாசியை விடுதிக் கட்டணமாகவும், மீதியை தனது பிற்காலத் தேவைக்காக சேமித்தும் வருகிறார். மேலே தரப்பட்ட கூற்றில் பணத்தின் தொழிற்பாடுகளாகக் கூறக் கூடியவை

1) பண்டமாற்று ஊடகமும், பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனமும்.
2) பெறுமான அளவு கோலும், பெறுமானத் திரட்டும்
3) பரிமாற்று ஊடகமும், பெறுமானத் திரட்டும்
4) பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனமும், பெறுமான அளவு கோலும்
5) பரிமாற்று ஊடகமும், பெறுமான அளவு கோலும் (.....)

10. காசோலை தொடர்பாக பொருத்தமற்ற கூற்று எது?
    1) கட்டளைக்காசோலை எப்போதும் ஓர் நபரின் பெயரிலேயே வரையப்படும்.
    2) பெறுவோன் க/கு மட்டும் எனக் குறுக்கு கோடிட்ட காசோலையை நிபந்தனையுடன் கைமாற்ற முடியும்
    3) காசோலைப்பயன்பாடு வங்கித்தொழில் சட்டத்திற்கு அமைய இடம் பெறுகின்றது
    4) காசோலை ஒன்றின் ஆயுள்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும்
    5) கைமாற்றத் தகாதது என குறுக்கு கோடிட்ட காசோலையையும் புறக்குறிப்புடன் கைமாற்றமுடியும் (.....)

11. உயர் தரத்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன் காப்புறுதியின் அடிப்படைத் தத்துவங்கள் தொடர்பாக வெளியிட்ட சில கூற்றுகள் வருமாறு
    A. கணவன் தனது மனைவியின் ஆயுள் மீது காப்புறுதி செய்தகு உரிமை உண்டு.
    B. காப்புறுதி செய்யப்பட்ட சொத்தொன்று இழப்பு ஏற்படும் பட்சத்தில் ஏற்பட்ட இழப்புக்கு மேலதிகமான தொகைக்கு இழப்பீடு பெறுவதற்கு காப்புறுதி செய்தவருக்கு உரிமை உண்டு.
    C. இழப்பீட்டுக்கு உள்ளான வாகனங்களின் சிதைவுகளை இழப்பீடு பெறுவதற்கு முன்பு காப்புறுதித் தாபனத்துக்கு ஒப்படைக்க வேண்டும்.
    D. தந்தை தன் மகனின் ஆயுள் மீது காப்புறுதி செய்யும் உரிமை உண்டு.
    E. ஒரு சொத்தானது ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதித் தாபனங்களின் காப்புறுதி செய்யப்பட்டிருப்பின் இழப்பீட்டுத் தொகையானது ஒப்பந்தப் பெறுமதியின் விகிதாசாரப்படி வழங்கப்படும்.

    மேற் கூறப்பட்டவற்றில் உண்மையான கூற்றுகளைக் கொண்ட விடை எது?
    1) A BC 2) A C E 3)B C D 4) B DE 5) CDE (.....)

12. தொடர்பாடல் செயன் முறையின் அடிப்படைக் கூறுகளில் **மீளவலியுறுத்தல்** என்பதனால் கருதப்படுவது
    1) செய்தியை அனுப்புபவர் செய்தியை பெறுபவருடன் பரிமாறிக் கொள்ளும் தகவல்
    2) செய்தியை அனுப்புபவருக்கும், பெறுபவருக்கும் இடையில் இடம் பெறும் செய்திப் பறிமாற்றம் இடம் பெறும் இடமும், சந்தர்ப்பமும்.
    3) செய்தியை அனுப்புபவரும், செய்தியை பெறுபவரும் செய்தியைப் பரிமாற்றுவதற்கான காரணம்
    4) செய்தியை அனுப்புவருக்கு செய்தியை பெறுபவர் மூலம் கேட்ட அல்லது கூறப்பட்ட விடயம் தொடர்பாக காட்டும் துலங்கல்
    5) செய்தியை பெறுபவர் செய்தி கிடைத்தமையையும், புரிந்து கொண்டமையையும் வெளிப்படுத்தும் வகையில் செய்தியை அனுப்புபவருக்கு வழங்கும் தகவல் (.....)

13. முதல்வர் சார்பாக பொருட்களை கொள்வனவு, விற்பனை செய்யும் போது தனது சொந்திப் பெயரில் கொடுக்கல் வாங்கல் செய்யும் முகவர்
    1) தரகு முகவர் 2) தரகர் 3) காரணிகர் 4)பொறுப்பு முகவர் 5) ஏல முகவர் (.....)

14. ஏற்றுமதி நடைமுறையின் போது ஏற்றுமதியாளர் ஒருவருக்குத் தனது பொருட்களுக்கான உறுதியான பெறுவனவை உறுதி செய்யும் ஆவணம் யாது?
    1) வார்நாமம் 2) நாணயக்கடிதம் 3) வாக்குறுதிச்சீட்டு
    4) காப்புறுதி பத்திரம் 5) காசோலை (.....)

15. ஒரு நிறுவனத்தில் இருந்து வெளியேறிய முகாமையாளர் ஒருவரால் நேர்காணல் ஒன்றின்போது முன்வைக்கப்பட்ட கருத்துக்களின்படி அவர் நிறுவனத்தின் பதவியில் இருந்து வெளியேறியதற்கு, போதியளவான சம்பளமின்மை, கூடுதல் எண்ணிக்கையான ஊழியர்களை மேற்பார்வை செய்ய வேண்டியிருந்தமை, ஒரே நேரத்தில் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து கட்டளைகளைப் பெறவேண்டியிருந்தமை, தீர்மானமெடுப்பதில் சுதந்திரமின்மை, பலமான முறைசாராத் தொடர்புகளினால் முறைசார்ந்த அதிகாரம் சிதறுதல் போன்ற மன அழுத்தங்களே இதற்குப் பிரதான காரணங்களாகும் என எடுத்துக் கூறினார்.

    மேற்கூறப்பட்ட பந்தியில் வெளிப்படுத்தப்படும் ஒழுங்கமைத்தல் தத்துவங்கள் எத்தனை?
    1) 1 ஆகும் 2) 2 ஆகும் 3) 3 ஆகும் 4) 4 ஆகும் 5) 5 ஆகும் (.....)

PAST PAPERS WIKI

16. ஒடுங்கிய விசால அளவின் நன்மையாகக் கருதக்கூடியது எது?
1) நெருங்கிய மேற்பார்வை 2) விரைவான தீர்மானம் எடுத்தல்
3) குறைந்த நிர்வாகக்கிரயம் 4) ஊழியர்களுக்கான சுதந்திரம்
5) உயர்மட்டத்திற்கும் வாடிக்கையாளருக்குமான தொடர்பு (.....)

17. முன்னோக்கிச் சிந்திக்கும் சிந்தனைத்திறனைத் தூண்டுகின்ற முகாமைத்தொழிற்பாடு எது?
1) திட்டமிடல் 2) ஒழுங்கமைத்தல் 3) நெறிப்படுத்தல்
4) கட்டுப்படுத்தல் 5) ஊழியரிடல் (.....)

18. பொருளாதாரக் கட்டளைக்கணியம் தொடர்பான தவறான கூற்று எது?
1) கட்டகைக்கிரயமும் பாதுகாப்பு கிரயமும் சமனாக காணப்படும்.
2) இருப்பு தொடர்பான மொத்தக்கிரயத்தை இழிவுபடுத்தும் உபாயம்
3) களஞ்சியப்படுத்தல் செலவுக்கோடும் மொத்த செலவுக்கோடும் வெட்டும் புள்ளி
4) விற்பனைப்புரள்வு குறைவான விலை உயர்வான இருப்புக்கட்டுப்பாட்டு முறை
5) இருப்புதொடர்பில் மொத்தச்செலவுக்கோட்டின் இழிவுப்புள்ளி ஆகும். (.....)

19. பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி மொத்த நிலையான கிரயத்தைக் கணிப்பிடுக.
இலாபநட்டமற்ற புள்ளி – 4000 அலகுகள்
விற்பனை விலை அலகிற்கு – 30/=
மாறும் கிரயம் அலகிற்கு 20/=
1) 20 000 2) 120 000 3) 80 000
4) 200 000 5) 40 000 (.....)

20. ஒவ்வொரு தனிமனிதனுடைய தேவை விருப்பங்களை பூர்த்தி செய்வதுடன் தொடர்புடைய சந்தைப்படுத்தல் எண்ணக்கரு எது?
1) உற்பத்தி செயல் எண்ணக்கரு 2) உற்பத்தி பொருள் எண்ணக்கரு
3) விற்பனை எண்ணக்கரு 4) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
5) வாடிக்கையாளர் எண்ணக்கரு (.....)

21. பின்வருவனவற்றுள் எதனை சந்தைப்படுத்தலின் ஓர் கருமமாகக் கருதமுடியாது?
1) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி 2) உற்பத்தி
3) விலையிடல் 4) சந்தைத்துண்டமாக்கல்
5) மேம்படுத்தல் (.....)

22. செயற்பாட்டு முகாமைக் கருமங்களுடன் தொடர்புபட்ட விடயங்கள் சில கீழே தரப்படுகின்றன.
A – தொகுதி உற்பத்தி B – JIT முறை
C – 5S முறை D – EOQ முறை
E – பூச்சியத்தவறு F – தரவட்டம்
G – தரஉறுதி H – மொத்த தரமுகாமைத்துவம்
மேலே கூறப்பட்டவற்றில் தரக்கட்டுப்பாட்டு முறைகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதி எது?
1) ABCFG 2) CDEFG 3) CEFGH
4) ACEFG 5) DEFGH (.....)

23. உற்பத்தி வாழ்க்கை சுற்றுவட்டத்தில் ஓர் உற்பத்தி எக்கட்டத்தில் நீண்டகாலம் காணப்படும்?
1) உற்பத்தி அபிவிருத்திக்கட்டம் 2) உற்பத்தி அறிமுகக்கட்டம்
3) வளர்ச்சிக்கட்டம் 4) முதிர்ச்சிக்கட்டம்
5) வீழ்ச்சிக்கட்டம் (.....)

24. பின்வருவனவற்றுள் பணச்சந்தைக்கருவியாகக் கருதக் கூடியது?
1) திறைசேரி முறிகள் 2) பங்குகள் 3) வணிகப்பத்திரம்
4) தொகுதிக்கடன்கள் 5) முன்னுரிமைப்பங்குகள் (.....)

25. கீழே நிதிமுகாமைத்தீர்மானங்கள் சில தரப்படுகின்றன.

A – சரக்கிருப்புகள் B – கடன்கொடுத்தோர்

C – வணிகவிரிவாக்கம் D – பங்குஇலாபம்

E – நிலையான சொத்துக்கள் F – பங்குவழங்கல்

மேலே கூறப்பட்டவற்றில் நிதியிடல் தீர்மானங்களை மட்டும் கொர்ண்ட விடைத் தொகுதி எது?

1) ACE 2) DEF 3) BDF

4) CDF 5) BCF (.....)

26. பின்வருவன ஊழியர் செயல்திறன் மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும்.

A – ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை திட்டமிடல்

B – ஊழியர் தொடர்பான முகாமைத்துவம்

C – ஊழியர் செயற்பாடுகளில் ஈடுபடல்

D – ஊழியர் இடமாற்ற முகாமைத்துவம்

E – ஊழிய உற்பத்தி திறனை அதிகரித்தல்

மேலே கூறப்பட்டவற்றில் ஊழியர் செயல்திறன் மதிப்பீட்டின் அபிவிருத்தி நோக்கங்களை மட்டும் கொண்ட விடைத் தொகுதி எது?

1) ACE 2) ABD 3) ABE

4) ACD 5) BDE (.....)

27. தொழில் உருவாக்கத்தில் உள்ளடக்கப்படாத தந்திரோபாயம் பின்வருவனவற்றில் எது?

1) தொழில் எல்லை 2) தொழில் அபிவிருத்தி 3) தொழில் மாற்றம்

4) தொழில் பகுப்பாய்வு 5) பகுதியாக்கம் (.....)

28. பின்வருவனவற்றில் மனிதவள முகாமைத்துவத்தின் இலக்காக எதனைக் கருதமுடியாது

1) ஊழிய உற்பத்தி திறனை அதிகரித்தல்
2) சரியான ஊழியரை சரியான நேரத்தில் சரியான இடத்தில் பணிக்கமர்த்தல்
3) ஊழியர் அபிவிருத்தி
4) வேலைச்சூழலின் தரத்தினை உயர்த்துதல்
5) ஊழியர் தொடர்பான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தல் (.....)

29. ஓர் நிறுவனத்திற்கு சொந்தமான புறவலையமைப்பு பின்வருவனவற்றில் எது?

1) Internet (இணையம்) 2) Intranet (அக இணையம்) 3) Extranet(புற இணையம்)

4) Treenet (மரவலையமைப்பு) 5) Ringnet (வட்ட வலையமைப்பு) (.....)

30. வணிகத்திட்டம் ஒன்றில் வெளிக்கட்சியினருக்கு தகவல் வழங்குவது தொடர்பிலான பகுதி எது?

1) வணிகவிபரணம் 2) நிறைவேற்றுச்சுருக்கம் 3) செயல்திட்டம்

4) நிதித்திட்டம் 5) சந்தைப்படுத்தல் திட்டம் (.....)

❖ **31 தொடக்கம் 40 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.**

31. அ. மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ..... ஏற்படுகின்ற விருப்பம் ..... ஆகும்.

ஆ. ஓர் நாட்டிற்கு சொந்தமான உற்பத்தி வளங்களைப் பயன்படுத்தி ஆண்டொன்றில் உற்பத்தியாக்கப்பட்ட மொத்த வெளியீடு ..... என அழைக்கப்படுவதுடன் இது ..... அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

Past Papers Wiki

32. அ. எதிர்கால சமூகத்திற்காக நிறுவனம் ஒன்றில் கட்டியெழுப்பப்படும் மரபுகள் நிறுவன …….. என அழைக்கப்படுவதுடன் இவற்றின் சாதகமான நிலமை நிறுவனத்திற்கு ஓர் …… ஆகவும் காணப்படும்.

ஆ) சமூக நிலைபேறான அபிவிருத்தியினதும் பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியினதும் சேர்க்கை …… எனவும் சூழல் நிலைபேறான பாதுகாப்பினதும், பொருளாதார நிலைபேறான அபிவிருத்தியினதும் சேர்க்கை …….. எனவும் அழைக்கப்படும்.

33. அ) தற்போது கொள்கை வட்டி வீதங்கள் என்பதனுள் ……., …… என்பன உள்ளடக்கப்படுகின்றது.

ஆ) இறைக்கொள்கையானது …….. ஆல் வகுத்து நடைமுறைப்படுத்தப்படும் அதேவேளை நாணயக் கொள்கையானது ……. ஆல் வகுத்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

34. அ) கொவிற் தொற்றிலிருந்து பாதுகாக்கக்கூடிய வகையில் முகக்கவசம் ஒன்றினை நவீன முறையில் வடிவமைத்தல் …… முயற்சியாண்மை என அழைக்கப்படுவதுடன் அவை சூழலை மாசுபடுத்தாதவகையாகக் காணப்படும் போது அது ……. முயற்சியாண்மை எனவும் அழைக்கப்படும்.

ஆ) சிற்றளவு வணிகங்களுக்கு உதவும் நிறுவனங்களில் NDC, CEA ஆகியவற்றின் விரிவாக்கம் முறையே ……..., …… ஆகும்.

35. அ) அண்மைக்காலத்தில் விசேட வகை நிதிநிறுவனம் என்ற வகைக்குள் உள்வாங்கப்பட்ட நிறுவனமாக ……. கருதப்படுவதுடன் இலங்கை மத்தியவங்கியானது …….. வகைக்குள் உள்ளடக்கப்படுகின்றது.

ஆ) கடல் அபாயக் காப்புறுதியின் போது காப்புறுதி ……., …… உரிமை காணப்பட வேண்டும்.

36. அ) ஏற்றுமதியாளர் தனது கொடுப்பனவு தொடர்பான இடரினைக் குறைப்பதற்காக இறக்குமதியாளரிடம் இருந்து …….. ஐ எதிர்பார்ப்பதுடன் இறக்குமதியாளரது வங்கி குறித்த ஆவணம் தொடர்பிலான இடரைக் குறைப்பதற்கு இறக்குமதியாளரிடம் இருந்து …….. ஐ எதிர்பார்க்கின்றது.

ஆ) முதல்வர் சார்பாக உற்பத்திப் பொருட்களைக் கடனுக்கு விற்பனை செய்வதற்கும் அதற்கான கடன்பணத்தை அறவிட்டுக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டுடன் காணப்படுபவர் ……. எனவும் அவரது சேவைக்காக வழங்கப்படும் வெகுமதி ……. எனவும் அழைக்கப்படும்.

37. அ) அமைப்பொன்றின் இலக்குகள் மற்றும் நோக்கத்தினை…… மிக்க முறையில் அடைவதற்காக அருமையான வளங்கள் …….. ஆகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஆ) அமைப்பொன்றில் ……. மட்ட முகாமையாளர்கள் உயர்வான எண்ணக்கருவாத்திறனையும், கீழ்மட்ட முகாமையாளர்கள் குறைவான ……. திறனையும் கொண்டுள்ளார்.

38. அ) விளம்பரங்கள். விற்பனை மேம்படுத்தல்கள் என்பன ……. எண்ணக்கருவுடன் தோற்றம் பெற்றவையாகவும், பாடசாலைகள், வணக்கத்தலங்களுக்கு அருகில் மதுபான நிலையங்களை நிறுவக்கூடாது என்பது …….. எண்ணக்கருவினையும் வலியுறுத்தப்படுகின்றது.

39) அ) எதிர்காலத்தில் பங்குகளின் சந்தைவிலை அதிகரிக்கலாம் எனக்கருதி நிகழ்காலத்தில் நிகழும் விலைக்கு பங்குகளை கொள்வனவு செய்யும் ஊகவியாபாரி ..... என அழைக்கப்படுவர்.

ஆ) தற்போது கொழும்புப் பங்குபரிவர்த்தனையில் பயன்படுத்தும் விலைச்சுட்டிகளாக ..... , ... காணப்படுகின்றது.

40)அ) நாளாந்த வணிகக்கருமங்களை ஒழுங்காக மேற்கொள்வதற்கு பயன்படுத்தும் தகவல்முறைமை ..... ஆகும்.

ஆ) வணிகத்திட்டம் ஒன்றில் ஊழியர் பயன்பாடு தொடர்பான தகவல் வழங்கும் பகுதி ..... ஆகும்

➢ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41. பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகளைக் குறிப்பிடுக.
   1. ……
   2. ……
   3. ……
   4. ……

42. வணிக ஒழுக்க நெறிகளின் வகைகளைக் குறிப்பிடுக.
   1. ……..
   2. ……..
   3. ……..
   4. ……..

43. கூட்டுறவு வணிகங்களுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களைக் குறிப்பிடுக.
   1. ……..
   2. ……..
   3. ……..
   4. ……..

44. களஞ்சியசாலை ஒன்றில் பொருட்களை இடத்திற்கிடம் நகர்த்துவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   1. ……..
   2. ……..
   3. ……..
   4. ……..

45. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நோக்கங்கள் எவை?
   1. ……..
   2. ……..
   3. ……..
   4. ……..

46. சாதாரண திறன்களைக் காட்டிலும் ஓர்முகாமையாளர் கொண்டிருக்கவேண்டிய விசேட நான்கு தருக.

1. ……..
2. ……..
3. ……..
4. ……..

47. இருப்புக்கட்டுப்பாட்டின் போது பயன்படுத்தப்படும் நுட்பமுறைகளைக் குறிப்பிடுக.

1. ……..
2. ……..
3. ……..
4. ……..

48. உற்பத்திச் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் நவீன நுற்பமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ……..
2. ……..
3. ……..
4. ……..

49. சேவைச்சந்தைப்படுதலில் காணப்படும் போட்டியின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ……..
2. ……..
3. ……..
4. ……..

50. மனிதவள முகாமைத்துவத்தில் ஊழியர் செயல்திறனை அளவிடுவதற்கான நியதிகள் நான்கினைப் பெயரிடுக

1. .....
2. .....
3. .....
4. .....

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
க.பொ.த (உயர்தரம்) 2024
ஆறாம் தவணைப்பரீட்சை

தரம் 13 (2024) **வணிகக்கல்வி- 32-T-11** **மூன்று மணித்தியாலம்**

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

அறிவுறுத்தல்கள்

❖ **ஓவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

பகுதி 'அ'

01) சுதன் என்பவர் ஓர் விவசாய விஞ்ஞானப் பட்டதாரி ஆவார். இவர் தான் கற்ற கல்வியினை பிரயோக ரீதியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற வகையில் விவசாயியான தனது தந்தைக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் நிலத்தில் தந்தையுடன் சேர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டார். இவர் தனது அறிவாற்றல் மூலம் கழிவுகள் மற்றும் மண்புழுக்களைப் பயன்படுத்தி சேதனப் பசளைகளை தயாரித்ததுடன் இயற்கையான கிருமி நாசினிகளையும் பயன்படுத்தி தனது விவசாயத்தைத் தொடர்ந்தார். இவரது விவசாய விளைச்சல் அமோகமாக இருந்தது. இவர் தனது வரு விளைவுகளை உள்நாட்டில் விற்பனை செய்வதுடன் ஓர் பகுதியை பதனிட்டு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தார். இதனால் இவருடைய விற்பனை, இலாபம் என்பன அதிகரித்தது. இவர் தனது வணிகத்தை மேலும் விரிவுபடுத்த எண்ணி தனது இரண்டு நண்பர்களைப் பணிக்கமர்த்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் வேளையில் இவரது உற்பத்திகளை கேள்வி அதிகரித்து நிகழ்நிலை ஊடாகவும் கொள்வனவுக் கட்டளைகள் பெறப்படுகின்றது.

(i) அ) மேலுள்ள விடய ஆய்வில் பூர்த்தி செய்யப்படும் மனித தேவை ஒன்றினையும் விருப்பம் ஒன்றினையும் குறிப்பிடுக.

ஆ) மேற்குறித்த வணிகத்தின் அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(ii) அ) சுதன் வணிகத்தினால் நிறைவேற்றப்படும் சூழல் தொடர்பாக சமூகப் பொறுப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) சுதனின் வணிகத்தால் நிறைவேற்றப்படும் இரண்டு வணிக நோக்கங்களைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(iii) சுதனின் வணிகம் வெற்றியளித்தமைக்கான நான்கு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(4 புள்ளிகள்)

(iv) சுதனின் வணிகத்தினை பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

(1) உற்பத்தியின் தன்மை (2) உற்பத்தித் துறை

(3) உரிமை (4) நோக்கம ($\frac{1}{2} \times 4 = 4$ புள்ளிகள்)

(v) நிகழ்நிலை ஊடாக வணிகத்தில் ஈடுபடுவதன் மூலம் சுதன் பெற்றுக் கொள்ளும் அனுகூலங்கள் இரண்டினையும் பிரதிகூலங்கள் இரண்டினையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(2) (i) அரசு தனது பொருளாதார நோக்கங்களை பயனுறுதி மிக்க முறையில் அடைந்து கொள்வதற்கு வணிகங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது'

அ) அரசின் பொருளாதார நோக்கங்கள் எவை? (2புள்ளிகள்)

ஆ) கொள்கை வட்டிவீதத்தின் கூறுகளை சுருக்கமாக விளக்குக (2புள்ளிகள்)

(ii) 'நலமான வாழ்விற்கு நுகர்வோர் பாதுகாப்பு இன்றியமையாதது ஆகும்'

அ) நுகர்வோர் பொறுப்புக்கள் என்பதனை வரையறுத்து அவற்றினைப் பட்டியல்படுத்துக (2புள்ளிகள்)

ஆ) நுகர்வோர் சுயபாதுகாப்பை பெறும் வழிமுறைகளைத் தருக (2புள்ளிகள்)

(iii) 'பொதுவான நோக்கம் ஒன்றை அடைந்து கொள்வதற்கு நபர்கள் ஒன்றிணைந்து முயற்சி ஒன்றில் ஈடுபடல் வணிகஅமைப்பு ஆகும்'

அ) பங்குடமை வணிகம் ஒன்று ஆரம்பிப்பதனைக் காட்டிலும் தனியார் கம்பனிகளாக ஆரம்பிப்பதிலேயே தற்காலத்தில் ஆர்வம் காட்டுகின்றார். இதற்கான காரணங்கள் யாவை? (2புள்ளிகள்)

ஆ)எழுத்துவடிவிலான ஒப்பந்தம் ஒன்று பங்குடமை உறுதி ஒன்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (2புள்ளிகள்)

(iv) அங்கீகாரவணிகம் ஒன்றிற்கும் பங்குடமை ஒன்றிற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளைத் தருக? (4புள்ளிகள்)

(v) 'சமகால வணிகச்செயற்பாடுகளில் கூட்டுறவு வணிகங்களின் தோல்வியடையும் போக்குடையதாகக் காணப்படுகின்றது'

அ) கூட்டுறவு வணிகங்களின் தோல்விக்கான காரணங்கள் என உம்மால் கருதக்கூடியவற்றை பட்டியல்படுத்துக (2புள்ளிகள்)

ஆ) அரசகூட்டுத்தாபனங்களின் வகைகளை உதாரணத்துடன் தருக (2புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(03)

(i) புதியனபுனைதல் புத்தாக்க சிந்தனைகள் என்பவற்றின் மூலம் வணிக எண்ணங்கள் தோன்றுகின்றன'

அ) வணிகஎண்ணம் என்பதனை வரையறுக்குக (2புள்ளிகள்)

ஆ) முயற்சியாளர், முயற்சி, முயற்சியாண்மை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக (2புள்ளிகள்)

(ii) 'இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் சிறுவணிகங்களின் பங்களிப்பு தற்காலத்தில் அவசியமானது ஆகும்'

அ) சிறுவணிகங்களை உருவாக்கும் போது கவனத்தில் கொளள வேண்டிய காரணிகள் எவை? (2புள்ளிகள்)

ஆ) பின்வரும் தகவலைப்பயன்படுத்தி கீழே காணப்படும் வினாக்களுக்கு விடையளிக்குக

குமார் என்பவர் 20வயது நிரம்பிய ஒருவர் ஆவர். இவர் தான் சேமித்த 50000/= மூலதனமாக கொண்டு மிக்சர் தயாரிக்கும் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார் . இவர்தான் பெற்ற அனுபவத்தைப்

பயன்படுத்தி பெற்ற திறன் அனுபவத்தைப் பயன்படுத்தி 10% சந்தைப்பங்கை கைப்பற்றினார். இவர் வணிகத்தில் மேற்கொண்ட புதியனபுனைதல், குடும்ப அங்கத்தவர்களின் பங்களிப்பினால் வணிகத்தை விரிவாக்க விரும்புகிறார்.

1. வணிகத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு குமாருக்குத் தேவைப்படும் தேர்ச்சிகள் எவை?
2. வணிகத்தை மேலும் விரிவுபடுத்த குமார் மேற்கொள்ளக்கூடிய உபாயங்கள் எவை?

(2புள்ளிகள்)

(iii) 'பணத்தின் பரிதாப வளர்ச்சியால் இலத்திரனியல் பயன்பாடு சமகாலத்தில் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது'

அ) கடனட்டை, வரவுஅட்டை எல்லாவற்றுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைத் தருக? (2புள்ளிகள்)

ஆ) இலத்திரனியல் பணப்பயன்பாட்டால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைப் பட்டியல்படுத்துக (2புள்ளிகள்)

(iv) 'வணிகமுயற்சிகளின் விரிவாகத்தில் வங்கிகள் நிதிநிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்'

அ) வணிகவங்கி ஒன்றிற்கான உரிமம் வழங்கலுடன் தொடர்புடைய சட்டம், இழிவு மூலதனம், உரிமம் வழங்கும் அமைப்பினைத் தருக (2புள்ளிகள்)

ஆ) தற்காலத்தில் நிதிக்கம்பனிகளின் பங்கானது அதிகரித்து வருகின்றது. இதற்கான காரணங்கள் எவை? (2புள்ளிகள்)

(v) அ) வங்கிகள் கடன்வழங்கும் போது வாடிக்கையாளர் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் 6C என அழைக்கப்படுகின்றது. அவை எவை? (2புள்ளிகள்)

ஆ) தொழிற்படாக்கடன்களின் வகைகளைச் சுருக்கமாக விளக்குக (2புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(04)

(i) (அ) ஆயுள், சொத்துக்கள் தொடர்பில் தற்காலத்தில் இடர் மிகவும் அதிகரித்துக்கொண்டு செல்லுகின்றது இதனால் காப்புறுதியின் அவசியமும் அதிகரித்து செல்லுகின்றது. ராஜா என்பவர் தனது ஆயுளை 500000/= ரூபாவிற்கும் தனது காரை 1000000/= காப்புறுதி செய்துள்ளார். குறித்த காப்புறுதி ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய காப்புறுதி தத்துவங்களைத் தனித்தனியே தருக?
(ஆ) காப்புறுதியின் முக்கியத்துவங்கள் எவை? (2புள்ளிகள்)

(ii) 'தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கும் மக்களிடையே தொடர்களைப் பேணுவதற்கும் போக்குவரத்து இன்றியமையாதது ஆகும்'

அ) அண்மைக்காலத்தில் விமானப்போக்குவரத்து தொடர்பில் ஏற்பட்ட அபிவிருத்திகள் எவை? (2 (புள்ளிகள்)

ஆ) அதிவேக நெடுஞ்சாலை வலைப்பின்னல் அபிவிருத்தி காரணமாக வணிகத்துறையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் விளக்குக. (2புள்ளிகள்)

(iii) விநியோக வழிமுறை என்பது உற்பத்தியாக்கப்பட்ட உற்பத்திகள் இறுதிப்பாவனையாரைச் சென்றடையும் வழிமுறை ஆகும்.

அ) மொத்தவியாபாரியின் பணிகள் எவை? (2புள்ளிகள்)

ஆ) விநியோக வழிமுறையிலிருந்து மொத்த வியாபாரியை நீக்குவதற்கு சார்பான வாதங்களையும் எதிரானவாதங்களையும் தனித்தனியே தருக? (2புள்ளிகள்)

(iv) அ) சர்வதேச வியாபாரத்தின் போது ஏற்படும் இயற்கைரீதியான தடைகளையும் செயற்கை ரீதியான தடைகளையும் தனித்தனியே தருக

Past Papers Wiki

ஆ) சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தும் பின்வரும் ஆவணங்களை விளக்குக

i. நாணயக்கடிதம்

ii. சுமைச்சீட்டு (2புள்ளிகள்)

(v) 'சிறப்புச்சந்தைகள் சில்லறை வியாபாரத்தில் நவீன போக்காகக் காணப்படுகின்றது'

அ) சிறப்புச்சந்தைகளை நுகர்வோர் அதிகளவில் விரும்புவதற்கான காரணங்கள் எவை? (2புள்ளிகள்)

ஆ) சிறப்புச்சந்தை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் காணப்படும் வரையறைகள் எவை? (2புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி 'ஆ'

(05)

(i) 'அமைப்பொன்றின் இலக்கினை பயனுறுதிமிக்க முறையில் அடைந்து கொள்வதற்கு வளங்களை வினைத்திறமையாகப் பயன்படுத்தல் முகாமைத்துவம் ஆகும்.

அ) முகாமையாளர் என்பதனால் கருதப்படுவது யாது? ஓர் முகாமையாளர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத்தேர்ச்சிகள் எவை? (2புள்ளிகள்)

ஆ) முகாமைத்துவம் என்பதன் மூலக்கூறுகளை கூறி அவற்றிற்கு இடையிலான தொடர்பினை விளக்குக (2புள்ளிகள்)

(ii) 'வணிகங்கள் வினைத்திறமையான திட்டமிடலை மேற்கொள்கின்ற போது சில திட்டங்கள்தோல்வியில் முடிவடைகின்றது'

அ) திட்டமிடலின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை? (2புள்ளிகள்)

ஆ) திட்டம் ஒன்று தோல்வியடைவதற்கான காரணங்கள் எவை? (2புள்ளிகள்)

(iii) 'திட்டத்தில் கூறப்பட்ட விடயங்களை ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தல் ஒழுங்கமைத்தல் ஆகும்.

அ) இலங்கையின் கல்விக்கட்டமைப்பின் பிரகாரம் பாடசாலை ஒன்றின் ஒழுங்கமைத்தல் வரைபடத்தினை காட்டுவதுடன் அதற்கான தத்துவங்களையும் சுருக்கமாக விளக்குக (2புள்ளிகள்)

ஆ) அதிகாரக் கையளிப்பினை மேற்கொள்வதில் சில சமயங்களில் உயர்மட்டத்தவர்கள் தயக்கம் காட்டுகின்றனர். இதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(iv) 'அமைப்பின் இலக்கினைப் பயனுறுதிமிக்க முறையில் அடைந்துகொள்வதற்கு ஏனையோரை நல்வழிப்படுத்தல் ஆற்றல் தலைமைத்துவம் ஆகும்

அ) அமைப்பு ஒன்றில் தலைவரும் முகாமையாளரும் ஒருவர் எனக்கருதப்படுகின்றார்கள். ஏற்றுக்கொள்வீரா? விளக்குக (2புள்ளிகள்)

ஆ) நடத்தை சார் தலைமைத்துவத்தில் தலைவர் ஒருவரின் நடத்தையைக் Blake and mouton என்பவரின் வரைபடத்தினூடாக விளக்குக. (2புள்ளிகள்)

(v) அ) செயற்பாட்டு முகாமையின் பணிகளை சுருக்கமாக குறிப்பிடுக. (2புள்ளிகள்)

ஆ) உற்பத்தி தொழிற்பாடுகளில் கணினிகள் பயன்படுத்தக்கூடிய நான்கு முறைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (2புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Past Papers Wiki

(06)

I. அ) வணிகம் ஒன்றின் குறிப்பிட்ட இருப்பு தொடர்பான இழிவுமட்டமானது ஏன் பாதுகாப்பு இருப்புமட்டம் என அழைக்கப்படுகின்றது? (2புள்ளிகள்)

ஆ) பின்வரும் பதங்களை விளக்குக
1. தரவட்டம்
2. பூச்சியத்தவறு (2புள்ளிகள்)

II. 'வாடிக்கையாளருடைய தேவை, விருப்பங்களை முன்னுணர்வதற்கு சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி அவசியமானது ஆகும்.
அ) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) சந்தைப்படுத்தல் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் படிமுறைகள் எவை?
(2புள்ளிகள்)

III. ஓர் நிறுவன உற்பத்திகள் வேறு நிறுவன உற்பத்திகளில் இருந்து வேறுபடுத்தி இனங்காண்பதற்கு குறியிடல் அவசியமானது ஆகும்
அ) குறியிடலில் வகைகளை உதாரணத்துடன் தருக. (2புள்ளிகள்)

ஆ) பண்டக்குறி விசுவாசம் என்பதனால் கருதப்படுவது யாது? உதாரணம் தருக.
(2புள்ளிகள்)

IV. அ) ஓர் நிறுவனம் தமது உற்பத்திகளுக்கு பல்வேறு நோக்கங்களிற்காக விலையிடலினை மேற்கொள்ளுகின்றது. அவ்வாறான நோக்கங்களை பட்டியல்படுத்துக.
(2புள்ளிகள்)

ஆ) விலையிடலின் போது கவனத்தில் கொள்ளப்படும் 5C க்குரிய விடயங்களைக் குறிப்பிடுக..
(2புள்ளிகள்)

V. குமார் என்பவர் தேனீர்ச்சாலை உடமையாளர் ஆவர். அவர் தனது வாடிக்கையாளர் தொடர்பில் திருப்தியினை மதிப்பீடு செய்ய விரும்புகிறார்.
வாடிக்கையாளர் திருப்தியை அளவீடு செய்யக்கூடிய முறைகள் எவை? (4புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

(07) I. 'நாட்டின் நிதித்தேவையினைப்பூர்த்தி செய்வதற்கு நிதி மிகையுடையோரும் நிதி பற்றாக்குறை உடையோரும் நிதிப்பரிமாற்றம் கருதி ஒன்று சேர்தல் நிதிச்சந்தையாகும்.
அ) பணச்சந்தையின் உபசந்தை பட்டியலிட்டு விளக்குக (2புள்ளிகள்)

ஆ) கொள்கை வட்டிவீதங்களின் கூறுகளை விளக்குக (2புள்ளிகள்)

II. 'இலங்கையில் பங்குச்சந்தைச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யும் பிரதான பொறுப்பு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு கொண்டுள்ளது.
அ) பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் எவை?
(2புள்ளிகள்)

ஆ) பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிர்வாகக் கட்டமைப்பினைத் தருக?
(2புள்ளிகள்)

III. அ) ஏனையவளங்களுடன் ஒப்பிடும் போது மளிதவளங்கள் சில தனித்துவமான பண்பகளைக் கொண்டவை ஆகும். இந்தவகையில் மனிதவள முகாமைத்துவத்தின் தோற்றத்திற்கான காரணங்கள் எவை? (2புள்ளிகள்)

ஆ) மனிதவள முகாமைத்துவத்தின் பரிணாமவளர்ச்சிக்கட்டங்களை ஒழுங்குமுறையில் தருக
(2புள்ளிகள்)

IV. மனிதவள முகாமைக்கருமங்களில் மனிதவளத்திட்டமிடலுக்கு அடுத்தகருமமாக எப்போதும் ஆட்சேர்ப்பே கருதப்படுகின்றது ஏற்றுக்கொள்வீரா? விளக்குக (4 புள்ளிகள்)

V. அ) குமரன் நிறுவனம் கணனி பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இப்பதவிக்கு பொருத்தமான இருவரைத்தெரிவு செய்வதற்கு பின்பற்ற வேண்டிய தெரிவுமுறைகளை ஒழுங்கில் கூறுக (2புள்ளிகள்)

ஆ) செயல்திறன் மதிப்பீட்டின் நோக்கங்களைத் தருக. (2புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(08) I. வணிகத்துறையில் புரட்சிகரமான மாற்றத்திற்கு இணையமானது பெரும்பங்காற்றுகின்றது. மேற்கூறப்பட்ட கூற்று தொடர்பாக கருத்துரை தருக (4புள்ளிகள்)

II. அ) தகவல்முறைமை என்றால் என்ன? (2புள்ளிகள்)

ஆ) தகவல்முறைமையில் யுகங்களைத் தருக (2புள்ளிகள்)

III. அ) 'தரவுகளை விட தகவல் பயனுள்ளதாகும்' தரவு, தகவல் என்பவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக (2புள்ளிகள்)

ஆ) மோதிரவலையமைப்பு, நட்சத்திர வலையமைப்பு என்பவற்றை வரையறுத்து வேறுபடுத்துக (2புள்ளிகள்)

IV. வணிகம் ஒன்றை உருவாக்குவதற்கும் நவீனமயப்படுத்துவதற்கும் வணிகத்திட்டம் இன்றியமையததாகும்.

அ) வணிகஎண்ணம் என்பதனால் கருதப்படுவது யாது? (2புள்ளிகள்)

ஆ) வணிகத்திட்டத்தினுள் பயன்பாடுகள் எவை? (2புள்ளிகள்)

V. வணிகத்திட்டத்தின் கூறுகளைத் தருக. (4புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library